ஹம்பாந்தோட்டை பிரதேச சபை - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடெனப்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு ஜுலை முதல் திசெம்பர் வரை காலப் பகுதி தொடர்பாக 04 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டிருந்தபெற வேண்டிய முத்திரைக் கட்டணம் கூட்டுத்தொகை ரூபா 3.81 மில்லியனுக்கான வருமானம் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும் என.	காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதி தொடர்பாக பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் கணக்கீடு செய்திருக்காததுடன், 2024 ஆண்டு ஒக்தோபர் மாதத்திற்குரிய பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1.01 மில்லியன் தொகையாக காணப்பட்டது.	2025 நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும் என.	கணக்காண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	அருவச் சொத்துக்கள் கீழ் கணக்கீடு செய்ய வேண்டிய 04 முகாமைத்துவ தகவல் முறைமையின் கூட்டுக் கிரயம் ரூபா 720,000 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிவில்லை.	2025 நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும் என.	அருவச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 171,683 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் அளிக்கப்படவில்லை.	செலவுகளுக்காக திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் சபையின் மயுரபுர வாராந்த சந்தை நிர்மாண வேலைக்காக கூட்டுத்தொகை ரூபா 110,210 தொகை குறைவாக மூலதனப்படுத்தப்பட்டு இருந்தது.	2025 நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும் என.	குறைவாக மூலதனப்படுத்தப்பட்டிருந்த நடைமுறையல்லாத சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதி படி பெறுமதிகளிடையே ரூபா 8.63 மில்லியனிற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.	நிலையான சொத்துக்களின் பெறுமதி சரி செய்யப்பட்டது எனவும் மற்றும் சரியான பிரதி இணைக்கப்பட்டுள்ளது என.	உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்யப்பட வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
அட்டவணைகள், துணைப் பதிவேடுகள், கணிப்பீட்டு அறிக்கைள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் காணப்படாமைகள் கூட்டுத்தொகையில் ரூபா 21.24 மில்லியன் தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	கணிப்பீடொன்று ஊடாக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 2025 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் எனவும் மற்றும் கணிக்கப்பட்ட முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20	வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் 2010, 2011 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது வீதவரி அறவிடப்பட்டமையால் பெறுமதி மதிப்பீடுகள் காலரீதியாக செயற்படுத்தப்படாத காலம் 13 வருடங்களாகும்.	பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்காக விலைமதிப்பீட்டு திணைக்களத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என.	வீதவரி ஆதனங்கள் குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் காலரீதியாக பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 371	முற்பணத்திற்குரிய கருமம் முடிவடைந்த உடனே தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2010, 2011 மற்றும் 2012 ஆண்டுகளுக்குரிய வழங்கப்பட்டிருந்த ரூபா 63,250 தொகை பெறுமதி முற்பணங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்காக முறையே ரூபா 55,000 தொகை மற்றும் ரூபா 8,250 தொகை என நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளது என.	குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட திறைசேரிச் செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான ரூபா 3.67 மில்லியன் பெறுமதிக்கான செயற்பாடு நிலையில் காணப்படாத நீர் பவுசர் ஒன்றும் மற்றும் டிரக்டர் வண்டியொன்றும் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அப்புறப்படுத்தல் தொடர்பாக நியமனம் செய்யப்பட்டுள்ள விஷேட கணிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	செயற்பாடு நிலையில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9.50 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5.38 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபைச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம் ரூபா	சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா	சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா	மதிப்பீட்டு வருமானம் ரூபா	சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா	சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா
வீதவரி மற்றும் வரி	715,085	787,472	952,239	713,017	683,606	764,606	819,264	877,784
வாடகை	19,626,035	19,660,482	19,533,374	236,468	24,016,200	24,072,754	23,975,892	109,360
அனுமதிப் பத்திரக் கட்டணம்	23,272,233	3,343,007	3,005,047	402,960	12,143,291	2,053,703	2,230,903	65,000
ஏனைய வருமானங்கள்	18,836,778	22,723,568	11,752,244	11,805,768	10,527,970	10,323,856	10,995,178	834,444
மொத்தம்	**62,450,131**	**46,514,529**	**35,242,904**	**13,158,213**	**47,371,067**	**37,214,919**	**38,021,237**	**1,886,588**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 1.89 மில்லியன் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 46.51 மில்லியன் தொகை காணப்பட்டது. அதன் படி ஆண்டின் போது சேகரிக்க வேண்டிய	2025 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையில் ரூபா 12.30 மில்லியன் தொகை அறவிடப்பட்டது என.	நிலுவை வருமானம் சேகரிப்பதில் முன்னேற்றத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்த வருமானம் ரூபா 48.40 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும் சேகரிக்கபட்ட வருமானம் ரூபா 35.24 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தல் முன்னேற்றம் 73 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.

2.2.3 வீதவரியும் வரியும்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வீதவரி வருமானம் ரூபா 701,017 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் 315 வீதவரி அலகுகளுக்கான ரூபா 471,032 தொகை 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படுகின்ற நிலுவை மீதிகளாகும். அவை அறவிடப்பட வேண்டிய வருமானத்தில் 67 சதவீத எண்ணிக்கை கொண்டிருந்ததுடன் அதில் ரூபா 5,000 இற்கு மிகையான 08 அலகுகளில் இருந்து ரூபா 223,369 இற்கான நிலுவை மீதியொன்றும் அடங்கியிருந்தது. இந்த நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி அறவீடு செய்திருக்கவில்லை.	நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு திட்டமிட்ட அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 04 அரசாங்க நிறுவனங்கள் உரிய முறையில் வீதவரி சபைக்கு செலுத்தியிருக்காததுடன் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 170,097 தொகையாகக் காணப்பட்டது.	குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பதிவுத் தபால் மூலம் கடிதங்கள் அனுப்பப்பட்டது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	அம்பலாந்தோட்டை சபை அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த பெரகம வீதி தெற்கு 46 வீதவரி அலகுகள் ஹம்பாந்தோட்டை பிரதேச சபையினால் 2018 ஆண்டு முதல் சிட்டையிடப்பட்ட ரூபா 105,768 இற்கான நிலுவையொன்று காணப்பட்ட போதிலும், அந்த மீதிகளை விரைவாக	நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் பதில் கிடைத்திருக்கவில்லை.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஈ) 2019 ஆண்டின் போது நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 03 செலுத்துகை தூண்களில் இருந்து 2020 ஆண்டு முதல் ஒரு ஆண்டிற்கு ரூபா 3,000 வீதம் ரூபா 60,000 தொகை வியாபார வரி வருமானம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.	இசைவுச் சான்றிதழ் வழங்கிய பின்னர் வியாபார வரி அறவீடு செய்யப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

2.2.4 அறிவித்தல் பலகைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த அறிவித்தல் பலகைக் கணிப்பீட்டின் படி சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 402,960 இற்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்திருக்காததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126(xxx) ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவைத் தொகையில் ரூபா 303,600 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா 99,360 இற்கான சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	சட்டத்தின் பிரிவு 126(xxx) இன் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ) தெரிவுக் களக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த 10 அறிவித்தல் பலகைகள் கணிப்பீட்டில் உட்படுத்தப்பட்டிருக்காததுடன், அதன்படி ரூபா 203,960 இற்கான கட்டணம் சபைக்கு அறவீடு செய்யப்பட வேண்டும்.	2025 ஆண்டில் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2023 ஆகஸ்ட் 11 திகதிய HPS/BA/2023/06 இலக்கங் கொண்ட வணிகக் கட்டிட வரைவு விண்ணப்பம் 01 வருடமும் 05 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.	நட்டஈடு செலுத்தப்படாத உடன்படிக்கை ஒன்றிற்கு அணுக வேண்டுமென வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறவிக்கப்பட்டிருந்த போதிலும உடன்படிக்கை வழங்கியிருக்காமையால்	சபைக்கு அறவிடப்பட வேண்டிய குறிப்பிட்ட கட்டணத்தை அறவீடு செய்து திருத்திய

	எனினும் 2025 பெப்ரவரி 05 திகதி களப் பரிசோதனையின் போது அந்த கட்டிடம் சிலொப் மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்டு வியாபார அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தது. அதன்படி 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பகுதி II அட்டவணை 02 பிரகாரம் முறையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று இன்றி மற்றும் சபையின் அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த வேலைகள் தொடர்பாக ரூபா 42,900 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை.	அங்கீகரிக்கப்படாமையால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ரூபா 42,900 தொகைக்கான அணவல் கட்டணம் அறவீடு செய்யப்படும் என.	வரைபினை அங்கீகரிக்க வேண்டும்.
(ஆ)	2024 மார்ச் 28 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த 385.50 சதுர மீற்றர்களை கொண்ட HPS/BA/2024/03/RN இலக்கங் கொண்ட வாணிப கட்டிடம் தொடர்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் அளவு 440.14 சதுரமீற்றர் அளவாகக் காணப்பட்டது. அதன்படி குறிப்பிட்ட அளவினை மிகைத்து நிர்மாணிக்கப்பட்டிருந்த 54.64 சதுரமீற்றர்களுக்காக ரூபா 109,280 இற்கான அணவல் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் கட்டணம் சபையினால் அறவீடு செய்திருக்கவில்லை.	அங்கீகாரமின்றி நிர்மாணித்திருந்த நிர்மாண வேலைகளுக்காக திருத்திய வரைபு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் படி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது என.	சபைக்கு அறவிடப்பட வேண்டிய குறிப்பிட்ட கட்டணங்கள் அறவீடு செய்து திருத்திய வரைபினை அங்கீகரிக்க வேண்டும்.
(இ)	2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டிருந்த 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டிருந்த 2264/18 மற்றும் 2022 ஜனவரி 27 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் படி 2015 ஆண்டு முதல் நிர்மாணிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்ற திண்மக் கழிவுப் பொருள் மத்திய நிலையத்தில் காணப்படுகின்ற மலக் கழிவுப்பொருள் பொதுச் சுத்திகரிப்பு முறைமைக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொண்டிருக்கவில்லை.	மலக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்ற கொள்கைசார் விதமாக தீர்மானிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு வேண்டப்பட்டுள்ளது என.	குறிப்பிட்ட சட்ட விதிகளின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடடிவக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்புடன் மற்றும் முறையான ஆய்வின்றி செயற்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற காரணத்தினால் ஹம்பாந்தோட்டை பிரதேச சபையினால் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் ஏற்பாடுகளின் மீது ரூபா 7.96 மில்லியனிற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு 2021 திசெம்பர் 07 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த உலர்வலய தாவரவியல் பூங்காவின் அண்மையில் வாகனத் தரிப்பிடம் அந்த நாள் முதல் 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் கணிசமான வருமானமொன்றினை உழைக்காமல் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.	தாவரவியல் பூங்காவிற்கு வரக் கூடிய உல்லாசப் பிரயாணிகள் தாவரவியல் பூங்காவில் உட்பக்க வாகனத் தரிப்பிடத்தை பயன்படுத்துவதனால் வருமானமொன்றை இழந்துள்ளது என.	செயற்திட்ட திட்டங்கள் செயற்படுத்தும் போது நிறுவனங்களிடையே இணைப்பொன்று மேற்கொண்டு திட்டங்களை செயற்படுத்தப்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய இடர் உதவி சேவை நிலையத்தின் மூலம் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 06 மில்லியன் பெறுமதியான நீர் பவுசரின் உரிமையை வாகனம் வழங்கப்பட்டு இரண்டு வருடங்கள் மிகையான காலம் கடந்திருந்த போதிலும் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நீர் பவுசரை உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	சபைக்கு சொந்தமான 02 நீர் பவுசர்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதியளவில் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 53 காணிகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் சபைக்கு சொந்தமான 06 காணிகள் மற்றும் 05 கட்டிடங்கள் 2024 திசெம்பர் 31 திகதியளவிலும் எதுவித பயன்தரு கருமங்களுக்கும் எடுக்கப்படாமல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.	அனைத்துக் காணிகளையும் உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள் எதிர்காலத்தில் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்கு சொந்தமான 53 காணிகளின் சட்டபூர்வமான உரிமையை உரித்தாக்க வேண்டியதுடன் குறை பயன்பாட்டு 06 காணிகள் மற்றும் 05 கட்டிடங்கள் ஆக்கபூர்வமான அலுவல்களுக்கு ஈடுபடுத்த வேண்டும்.

3.4 ஒப்பந்த நிருவாகம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(i)	மயுரபுர வாராந்த சந்தையின் வாகன தரிப்பிடம் நிர்மாணிப்பதற்காக 2021 செப்தெம்பர் 09 திகதி முதல் 2021 திசெம்பர் 07 திகதி வரை காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு ரூபா 7.90 மில்லியனுக்காக மதிப்பீட்டு பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொண்டு சாட்டப்பட்டிருந்தது. அவற்றில் 08 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 237 (அ)(i) பிரமாணங்களுக்கு இணக்கமின்றி பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக 2023 திசெம்பர் 29 திகதிய ரூபா 1.72 மில்லியன் தொகையும் 2024 மே 07 திகதி 10 சதவீதம் தடுத்துவைத்தல் பணம் ரூபா 278,600 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 2 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை இடைநடுவில் கைவிடப்படல் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.	கொவிட் 19 தொற்றுநோயுடன் ஏற்பட்டிருந்த நிலைமை மற்றும் நாட்டில் ஏற்பட்டிருந் பொருளாதாரச் சிக்கல் காரணமாக செயற்திட்டத்தின் வேலைகள் இடைநிறுத்தப்பட்டது என.	குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.
(ii)	மேற்கூறியவாறு நிறைவேற்றப்படாத வேலை விடயங்களுக்கான உடன்படிக்கை பெறுமதி ரூபா 4.75 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் 2024 ஆண்டின் ரூபா 154,110 தொகை செலவிடப்பட்டு மீண்டும் செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடப்பட்டு நிறைவேற்றப்படாத வேலைப்பகுதிகளுக்காக ரூபா 7.60 மில்லியனுக்கான (வெட் உடனான) ஒப்பந்த பெறுமதிக்கு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொண்டு வேலையை நிறைவேற்றி ரூபா 8.26 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பழைய ஒப்பந்தக்காரர் ஒப்பந்த வேலையை கைவிட்ட காரணத்தினால் 74 சதவீத எண்ணிக்கையான மேலதிக கிரயமொன்று சபைக்கு மேற்கொள்ள நேரிட்டிருந்தது.	தொழினுட்ப சேவை உத்தியோகத்தரின் முழுமையான கண்காணிப்பின் கீழ் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் தரப்பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொண்டு இருந்தமையால் கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டது என.	சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு நிதியங்கள் சிக்கனமாக பயன்படுத்தப்பட வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் 06 பதவிகள் தொடர்பாக 17 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என.	சபையின் பதவியணி தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி ஒரே சேவை நிலையத்தில் 05 வருட சேவைக் காலத்தை மிகைக்கும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும் சபையில் கடமையாற்றும் நான்கு உத்தியோகத்தர்களுக்கு 09 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையான காலப் பகுதியில் ஒரேசேவை நிலையத்தில் தங்கியிருத்தல் காணக்கூடியதாக இருந்தது.	வருடாந்த இடமாற்ற விண்ணப்பம் இரத்து செய்யப்பட்ட காரணத்தினாலாகும் என.	குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களை மிகைத்திருந்த உத்தியோகத்தர்கள் ஏனைய சேவை நிலையங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான பிரயாணச் செலவு முறையே ரூபா 2.46 மில்லியன் தொகை மற்றும் ரூபா 2.97 மில்லியன் தொகை காணப்பட்டமையால் ரூபா 513,023 இற்கான பிரதிகூலமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதன் சதவீதம் பாதீட்டுச் செலவில் 20 சதவீதமாகக் காணப்பட்டது.	பொது நிருவாகம், பௌதீக, சுகாரதார சேவை, ஏனைய பொது, திட்டமிடல் பயன்படு சேவைகள் பிரயாணச் செலவுகள் அதிகரித்தல் காரணமாக இருந்தது என.	முரண்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்காக திட்டமிடல் முறைமைப்படுத்த வேண்டும்.
(ஆ)	03 வருமான விடயங்களுக்கான பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 33.45 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் அந்த முரண் 15 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	சம்பள மீளளிப்பு மற்றும் மூலதன உதவி, அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் குறைவடைதல் இதற்கு காரணமாகும் என.	முரண்களை குறைப்பதற்கும், திட்டமிடலை முறைப்படுத்துவதற்கும் வருமானம் சேகரித்தலை செயற்திறனாக்குதலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.